செ.வெ.எண்.154 நாள்.06.04.2017

**மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்**
**அனைவருக்கும் கல்வி இயக்கம்**
**காஞ்சிபுரம் மாவட்டம்.**

## 2017–18ம் கல்வி ஆண்டில் பள்ளி செல்லா குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள் குறித்த கணக்கெடுப்பு பணி

இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009ன்படி 6 முதல் 14 வயதுடைய அனைத்து குழந்தைகளையும் முறையான பள்ளியில் சேர்த்து கல்வி வழங்க வேண்டும். அதன்படி அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளின் குடியிருப்புகளிலும் ஏப்ரல் மற்றும் மே–2017 (10.04.2017 முதல் 25.05.2017 வரை) ஆகிய மாதங்களில் பள்ளிச் செல்லா / இடைநின்ற குழந்தைகள் (6–14 வயது) மற்றும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளை ( 0–18 வயது ) பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்(பொ), ஆசிரியர் பயிற்றுநர்கள், சிறப்பாசிரியர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், கல்வி தன்னார்வலர்கள் ஆகியோர்களை கொண்டு கணக்கெடுப்பு பணி நடைபெறவுள்ளது. எனவே இக்கணக்கெடுப்புப் பணிக்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.